**மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை –10 அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை: மரு.ஜெ.சங்குமணி, எம்.டி.,**

**ந.க.எண்:107020/நி2/4/2024** **நாள்:27.11.2024**

பொருள் : நிருவாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.வி.ஸ்ரீ விஜயகாந்தி தா/பெ.(அமரர்) திருமதி.டி.புஷ்பராணி, இளநிலை உதவியாளர், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை)எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020.
2. அரசாணை (நிலை)எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்புத் துறை, நாள்:26.02.2020.
3. அரசு கடித எண்:8775/ஏடி2/2020–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2020.
4. இவ்வியக்கக பணி ஒதுக்கீட்டு ஆணை ந.க.எண்:64345/நி2/4/2021–179, நாள்: 22.08.2023.
5. முதல்வர், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை அவர்களின் பணி நியமன செயல்முறை ஆணை எண்:5081/நி4(1)/2014, நாள்:23.08.2023.
6. அரசு கடித எண்:3736941/ஏடி2/2022–1, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (ஏடி2)துறை, நாள்:18.01.2023.
7. அரசாணை (நிலை) எண்:33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ.1) துறை, நாள்:08.03.2023 மற்றும் இதர தொடர்புடைய ஆணைகள்.
8. முதல்வர், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்:5081/நி4/1/2014, நாள்:28.10.2024.

******

**ஆணை:**

சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிற்றேவலராகப் (Lascar) பணிபுரிந்து கொண்டிருந்த திருமதி.டி.புஷ்பராணி அவர்கள் 19.12.2013 அன்று பணியில் இருக்கும் போது இறந்துள்ளார். அவரின் பிறந்த தேதி 11.12.1953 ஆகும். அவரின் உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.12.2013 ஆகும். இவர் தாம் வகித்து வந்த சிற்றேவலர் பணியிடத்தில் தகுதிகாண் பருவம் முடித்தவர் ஆவார். அவரின் கணவர் திரு.ஜி.விஜயராஜன் என்பவர் தனது 27.02.2014 நாளிட்ட கடிதத்தில், தனது மகனும், இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரருமான திரு.வி.ஸ்ரீ விஜயகாந்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி கோரி

உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார். தனியரும் தனது 28.02.2014 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணி கோரி கோரி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார்.

2) தனியர் திரு.வி.ஸ்ரீ விஜயகாந்தி அவர்களின் பிறந்த தேதி 22.10.1980 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19500 – 71900/- நிலை-8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 05.10.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.வி.ஸ்ரீ விஜயகாந்தி என்பவரின் பணியினை, பார்வை 1, 2, 3, 6 மற்றும் 7-இல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின் அடிப்படையில், அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 05.10.2023 முற்பகல் முதல், அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து, செயல்முறை ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியருக்கு முதலாம் ஆண்டுக்கான ஊதிய உயர்வு / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மரு.ஜெ.சங்குமணி
மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர்

பெறுநர்

1. திரு.வி.ஸ்ரீ விஜயகாந்தி,
   இளநிலை உதவியாளர்,
   இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை-03.
   – உரிய வழியாக.
2. முதல்வர், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை-03.
3. மாநில கணக்காயர், சென்னை -600 018.
4. சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-35.

நகல்:-

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை-06.
உதிரி / இருப்பு கோப்பு.

//உண்மை நகல் / அனுப்பபடுகிறது//

18.12.2024
Administrative Officer
Rajiv Gandhi Govt. General Hospital
Chennai-600 003
18/12/2024

மேலாளர்

28/11/24